**செய்தி வெளியீடு 1113 நாள்: 18.12.2010**

**தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு இலவசமாக வழங்கப்படும் சர்க்கரைப் பொங்கலுக்கான பொருட்கள் அனைத்தும் மறு சுழற்சியில் மீண்டும் பயன்படுத்தக்கூடிய பைகளில் மட்டுமே வழங்கப்படும்**

**மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்**
**திரு. எ.வ. வேலு அறிவிப்பு**

2011-ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் பரிசாக ஒரு கோடியே தொன்னூற்று நான்கு லட்சத்தி ஐந்தாயிரத்தி ஐனூற்று எழுபத்தி இரண்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு, சர்க்கரைப் பொங்கல் செய்வதற்காக 500 கிராம் பச்சரிசி, 500 கிராம் வெல்லம், 100கிராம் பாசிபருப்பு, 10 கிராம் முந்திரி பருப்பு, 5 கிராம் திராட்சை, 5 கிராம் எலக்காய் ஆகிய பொருட்கள் ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்படும்.

இப்பொருட்களை கொள்முதல் செய்யவதற்காக 12.11.2010 அன்று செய்திதாள்களில் முறையாக விளம்பரப் படுத்தப்பட்டு 19.11.2010 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அதன்படி ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டு 22.11.2010 அன்று வழங்கல் ஆணைகள் அளிக்கப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. ஒப்பந்தப்புள்ளி சட்டத்தின்படி இதர மாநிலங்களிலும் விளம்பரப் படுத்தப்பட்டிருந்தும் தமிழகத்திலுள்ள வர்த்தகர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகளை அளித்துள்ளனர்.

கொள்முதல் செய்யப்படும் அனைத்து பொருட்களும் மழை மற்றும் பனிக்காலத்தில் சுற்றுச் சூழலில் நிலவும் ஈரப்பதத்தினால் கெடாத வகையில் பாதுகாத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியம் என்பதால், கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் பாலிதீன் பைகளில் பொட்டலங்களிடப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. புத்தாண்டு பொங்கல் பரிசு வழங்கப்பட உள்ள பாலிதீன் பைகள் 35 முதல் 52 மைக்ரான் அளவுடையவை என்பதால் அனைத்தும் மறுசுழற்சி முறையில் பயன்படுத்தக் கூடியன ஆகும்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரை தற்போது நிலவும் கடும் பனியினால் பாதிக்கப்படாதவாறு பாலித்தீன் பைகளில் அடைக்கப் பெறும் அனைத்து சிறு பொட்டலங்களும், துணிப்பைகளில் இடப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

அனைத்து பாலிதீன் பைகளும் மறு சுழற்சியில் மீண்டும் பயன்படுத்தக் கூடியவைகளே என்பதால் இதில் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்படுவதற்கு சற்றும் இடமில்லை.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9